# *மக்கள் மனமாற்றமடைவார்களா?*

அபூ அப்தில்லாஹ்

26.12.2004 ஞாயிறு அன்று இந்திய வரலாற்றில் ஒரு பெரும் சோக நிகழ்ச்சி நடந்து முடிந்து விட்டது. இந்தியாவில் மட்டுமல்ல; அண்டை நாடுகளிலும் இதே கோரக்காட்சிகள் அரங்கேறி பல்லாயிரம் மக்களின் உயிர்களையும், உடமைகளையும் வாரிக்கொண்டு சென்றுள்ளது. அப்பகுதிகளில் எங்கு பார்த்தாலும் ஒரே சோகக் காடாகக் காணப்படுகிறது. அப்பகுதி மக்களின் சோகத்தைத் துடைக்கும் முயற்சியாக ஜாதி, மதம், இனம், மொழி என பாகுபாடு பார்க்காமல், மனிதம் போற்றி தங்களால் இயன்ற அனைத்து உதவி, ஒத்தாசைகளையும் கொடுத்துதவ ஈர நெஞ்சமுள்ள அனைவரும் கடமைப்பட்டி ருக்கிறார்கள். அத்துடன் தங்களின் செயல்பாடுகளையும் மறு பரிசீலனைச் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

கடலுக்கடியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உண்டான கடல் கொந்தளிப்பால் இந்த அளவு சேதாரங்களும், உயிர் நஷ்டங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இதே நில நடுக்கம் இதே அளவு நிலப்பகுதியி ல் அதுவும் மக்கள் நெருக்கமாக வாழும் நகரப்பகுதிகளில் ஏற்பட்டிருந்தால்? நினைக்கவே பயமாக இருக்கிறது.

உயிர்ப்பலி பல ஆயிரங்களிலிருந்து பல லட்சங்களைத் தாண்டி இருக்கும். உடமைச் சேதாரங்களும் பல்லாயிரம் கோடிகளை எட்டி இருக்கும். ஏகன் இறைவன் அவன் அருளால் பாதுகாத்தான். ஒரு சிறிய **(Sample)** மாதிரியைக் கொண்டு மக்களைச் சிந்திக்கத் தூண்டி இருக்கிறான். மக்கள் இது கொண் டு படிப்பினை பெற்று மனம் திருந்தினால் தப்பித்தார்கள்; இல்லை என்றால் இதை விட பெரும் அழிவுகளையும், நஷ்டங்களையும் சந்திக்க நேரிடலாம். அது மட்டுமல்ல; இது இறைவனின் இரக்கமற்ற செயல் என்று வர்ணிப்பவர்கள் அரக்க மனம் படைத்தவர்களாக மட்டுமே இருக்க முடியும். உண்மை அது வல்ல. **“மக்கள் தங்கள் கரங்களால் தேடிக் கொண்ட தீயவினைகளே”** கடலிலும், கரையிலும் இவை போன்ற கொடிய சம்பவங்கள் இடம் பெறக் காரணமாகின்றன.

இதற்கு முன்னர் இறைத்தூதர் நூஹ்(அலை) அவர்களது சமூகம் அவர்களது தூய வாழ்க்கை நெறிப்போதனைகளை நிராகரித்துவிட்டு இறைவனுக்கு கற்களையும், சிலைகளையும் இணை வைப்பதிலும் மது, மாது, சூது என பஞ்சமா பாவங்களிலும் இவை போதாதென்று ஆண் புணர்ச்சியி லும் மூழ்கி இருந்தனர். நூஹ்(அலை) அவர்களின் மிக நீண்ட கால நன்முயற்சி விழலுக்கு இறைத்த நீராகிவிட்டது.

அதுமட்டுமல்ல; தீயவர்கள் திருந்திய ஒரு சிலரையும் வழிகெடுக்க முற்பட்டதால், இறைத்தூதர் மனம் வெதும்பி இறைவனிடம் முறையிட்டார்கள். அது பற்றி இறுதி மறை இவ்வாறு விவரிக்கிறது.

> **“நிச்சயமாக, நீ அவர்களை விட்டு வைப்பாயானால், உன் அடியார்களை அவர்கள் வழி கெடுத்து விடுவார்கள்; அன்றியும், பாவிகளையும், நிராகரிப்பவர்களையும் அன்றி அவர்கள் பெற்றெடுக்க மாட்டார்கள்”.**

*அல்குர்ஆன் நூஹ் 71:27*

நூஹ் 71ம் அத்தியாயம் முழுமையாகப் படித்துப் பார்த்துச் சிந்திக்கவும்.

இறுதியில் இறைத்தூதர் நூஹ்(அலை) அவர்களின் பிரார்த்தனை காரணமாக நிராகரித்த மக்கள் அனைவரும் பெரும் பிரளயத்தில் அழித்தொழிக்கப்பட்டார்கள்.

> **இறுதியாக, நம் உத்தரவு வந்தது. (மேலிருந்தும், கீழிலிருந்தும்) நீர் பொங்கியது. (நாம் நூஹை நோக்கை) "உயிர்ப்பிராணிகள் ஒவ்வொருவகையிலிருந்தும் ஒவ்வொரு ஜோடியை ஏற்றிக் கொள்ளும்; (மூழ்கடிக்கப் படுவார்கள் என்று நம்) வாக்கு ஏற்பட்டு விட்டதோ அவர்களைத்தவிர; உம் குடும்பத் தாரையும், விசுவாசம் கொண்டவர்களையும் ஏற்றிக் கொள்ளும்" என்று நாம் கூறினோம்; வெகு சொற்ப மக்களைத்தவிர மற்றவர்கள் அவருடன் விசுவாசம் கொள்ளவில்லை".**

*அல்குர்ஆன் ஹூது 11:40*

மேலும் : 11:25 முதல் 49 வரை படித்துச் சிந்தித்து விளங்கி சீர்திருந்தவும்.

நூஹ்(அலை) அவர்களது சமூகம் அழிக்கப்பட்டதற்குக் காரணம் அவர்களின் பாவச் செயல்களே. நூஹ் (அலை) அவர்களுடன் கப்பலில் ஏறிக் கொண்டவர்கள் மட்டுமே பாதுகாக்கப்பட்டார்கள். **"ஆக உயரமான மலையில் ஏறித்தப்பித்துக் கொள்வேன்"** என்று பெருமை பேசிய நூஹ்(அலை) அவர்களின் மகன் அவரின் கண் முன்னாலேயே நீரில் மூழ்கடிக்கப்பட்டான். அவன் ஒரு நபியின் மகனாக இருந்தும் அவன் பாதுகாப்புப் பெறவில்லை; அழிக்கப்பட்டான்.

நூஹ்(அலை) அவர்களது காலத்தில் சில தினங்கள் வானத்திலிருந்தும் நீர் கொட்டியது. பூமியிலிருந்தும் பீரிட்டு நீர் வெளிப்பட்டது. உலகமே நீரில் மூழ்க்கியது. பூமியில் வசித்த மக்கள் அனைவரும் அழிக்கப்பட்டார்கள். கப்பலில் ஏற்றிக் கொள்ளப்பட்டவர்களின் சந்ததிகளே இன்று இந்தப் பூமியில் வசித்து வருகிறார்கள். அவர்களிலும் மிகப் பலர் இன்று அந்த நூஹ்(அலை) அவர்களின் சமூகத்தில் பிரளயத்தால் அழிக்கப்பட்ட மக்களைப் போல், இறைவனுக்கு கற்களையும், சிலைகளையும், சமாதிகளை யும் கொண்டு இணை வைத்தல் மற்றும் மது, மாது, சூது என மூழ்கித் திழைக்கிறார்கள். நா டு முழுவதும் விபச்சாரம் கொடி கட்டிப்பறக்கிறது என்பதை செய்தி ஊடகங்கள் அம்பலப் படுத்திக் கொண்டிருக்கின்றன. துறவிகள் என்போரே விபச்சாரத்தில் முன்னணியில் இருந்து சாதனை படைக்கிறார்கள். பெரும்பான்மை மக்கள் பெரும் வழி கேட்டிலும், அராஜகங்களிலுமே மூழ்கித் திழைக்கின்றனர்.

உலக மக்களை நடுநிலையோடு வழி நடத்திச் செல்லக் கடமைப்பட்ட முஸ்லிம்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். முஸ்லிம்களே இன்று இறைவனின் இறுதி வேதமான அல்குர்ஆனைப் புறக்கணித்து விட்டு, முன்னோர்களை, மூதாதையர்களைப் பின்பற்றி அழிந்துபட்ட நூஹ்(அலை) அவர்களின் சமுதாயத்தைப் போல் செயல் படுகின்றனர். அவர்கள் முன் சென்றவர்களை சிலைகளாக, சமாதிகளாக வழிபட்டது போல், இன்றைய முஸ்லிம்கள் முன்னோர்களை, சமாதிகளாக்கி கூடு, கொடி, கந்தூரி, மௌலூது என வழிபாடுகள் நடத்தி இறைவனுக்குக் கோபத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இறைவனது கோபப் பார்வைக்கு முஸ்லிம் அல்லாதவர்களை விட முஸ்லிம்களே இன்று அதிகமாக ஆள ாகி இருக்கிறார்கள். இன்று இந்த பூமியில் ஏற்படும் அனைத்து அழிவுகளுக்கும் நாளை மறுமையில் முஸ்லிம்களே முதன் முதலில் பதில் சொல்லும் கட்டாயத்தில் இருக்கிறார்கள். வாகனத்தை ஓட்டிச்

செல்லக் கடமைப்பட்ட ஓட்டுனரே தறிகெட்டு நடக்கும் போது வாகனம் சீராக ஓடும் என எதிர்பார்க்க முடியுமா?

எனவே உலக மக்கள், குறிப்பாக முஸ்லிம்கள் தங்களின் பொறுப்பை உணர்ந்து தங்களைப் படைத்து உணவளித்து நிர்வகித்து வரும் சர்வ சக்தனான ஏகன் இறைவனுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு, அவனது இறுதி வேதத்தில் உள்ளது உள்ளபடி எவ்வித கூடுதல் குறைவு இல்லாமல், தங்களின் சுய கருத்துக்களையும், கற்பனைகளையும் புகுத்தாமல் எடுத்துச் செயல்பட முன்வந்தால் மட்டுமே இவ்வுலகம் செம்மையுறும். இல்லை என்றால் மேலும் மேலும் அழிவை நோக்கியே இவ்வுலகம் பயணிக்கும்.

ஒரு சில நிமிடங்களின் நில அதிர்வு இந்த அளவு கடுமையான விளைவை ஏற்படுத்தினால், அதே நில அதிர்வு சில மணிகள் நீடித்தால் என்ன ஆகும்? சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். நீருக்கடியில் ஏற்பட்ட நில அதிர்வே இந்த அளவு பாதிப்புகளை ஏற்படுத்தினால், மக்கள் வாழும் நிலப்பகுதியில் இது போன்ற நில அதிர்வு ஏற்பட்டால் என்ன நடக்கும்? சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

கடல் நீரின் கொந்தளிப்பே இந்த அளவு பாதிப்பை ஏற்படுத்துவதாக இருந்தால், பூமியிலிருந்தும், ஆகாயத்திலிருந்தும் தொடர்ந்து சில நாட்களுக்கு நீர் கொட்டினால் என்ன நடக்கும்? சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

விஞ்ஞான வளர்ச்சியில் மிக அதிகமாக முன்னேறி இருக்கும் இக்காலக் கட்டத்தில், இப்படியொரு நில அதிர்வு ஏற்படும் என முன் கூட்டியே கணித்து, மக்களை சுதாரிக்கச் செய்யும் ஆற்றல் இன்றைய மனிதனுக்கு இருக்கிறதா? இல்லையே! பின் எப்படி ஏகன் இறைவனின் நியதிகளை மீறித் தான்தோன்றித்தனமாக நடக்க முற்படுகின்றான். சிந்தித்து விளங்கித் திருந்த வேண்டாமா?

சிந்தித்து விளங்கி, ஏகன் இறைவனின் ஆற்றலை உணர்ந்து அவனுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு நடக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதுவே ஈருலகிலும் வெற்றியையும் ஈடேற்றத்தையும் பெற்றுத் தரும். இல்லை என்றால் உலக மறு உலக அழிவை எதிர்நோக்கி பயணிக் கும் கட்டாயத்தில் இருக்கிறோம். அது பற்றி இறுதி வேதம் அல்குர்ஆன் ஜில்ஜால் - அதிர்ச்சி அத்தியாயம் 99:1-8 இறைவாக்குகள் இவ்வாறு எச்சரிக்கின்றன.

> **“பூமி பெரும் அதிர்ச்சியாக அதிர்ச்சி அடையும் போது; இன்னும், பூமி தன் சுமைகளை வெளிப்படுத்தும் போது; ‘அதற்கு என்ன நேர்ந்தது?’ என்று மனிதன் கேட்கும் போது; அந்நாளில், அது தன் செய்திகளை அறிவிக்கும்; (அவ்வாறு அறிவிக்குமாறு) உம்முடைய இறைவன் அதற்கு வஹீ மூலம் அறிவித்ததனால்; அந்நாளில், மக்கள் தங்கள் வினைகள் காண்பிக்கப்படும் பொருட்டு, பல பிரிவினர்களாகப் பிரிந்து வருவார்கள்; எனவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந் தாலும் அத(ற்குரிய பல)னை அவர் கண்டு கொள்வார்; அன்றியும், எவன் ஓர் அணுவளவு தீமை செய்திருந்தாலும், அத(ற்குரிய பல)னையும் அவன் கண்டு கொள்வான்.”**

*அல்குர்ஆன் 99:1-8*

உலக மக்களே, குறிப்பாக முஸ்லிம்களே இறைவனின் இந்த மாதிரி எச்சரிக்கையைப் படிப்பினையாகக் கொண்டு மனம் திருந்துங்கள். இறைவனின் வல்லமையை, ஆற்றலை முறையாக உணருங்கள். அவனது கட்டளைகளை அப்படியே கூடுதல், குறைவு, வளைத்தல், திரித்தல், மறைத்தல் இன்றி எடுத்துச்

செயல்பட முன்வாருங்கள். முன்னோர்கள், மூதாதையர்கள் அடிச்சுவற்றைப் பின்பற்றுவதை விட்டும் விடுபடுங்கள். அதுவே வெற்றிப் பாதையாகும். இறைவன் அருள்புரிவானாக.